# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 08 | வரலாறு<br>சுட்டெண் : ............................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

❖ **மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. "இந்நாட்டில் மழையினால் பெறும் ஒரு துளி நீரையேனும் மனிதனுக்குப் பயன்படாமல் கடலில் கலக்க விடமாட்டேன்" என்ற வாசகத்துடன் தொடர்புடைய மன்னன்
   1) மகாசேனன் 2) தாதுசேனன்
   3) 1ஆம் பராக்கிரமபாகு 4) 1ஆம் விஜயபாகு

2. அநுராதபுரத்தில் நீர் விளையாட்டிற்கும் நீராடுவதற்கும் பயன்படுத்தப்பட்ட பொய்கை
   1) ரன்மசூபூங்கா பொய்கை 2) குமாரப்பொய்கை
   3) தாமரைப்பொய்கை 4) குட்டம்பொய்கை

3. டொன் ஜுவான் என்ற பெயருடன் கத்தோலிக்க மதத்தினைத் தழுவி போர்த்துக்கேயருக்குச் சார்பாகச் செயற்பட்டவர்
   1) யமசிங்க பண்டார 2) கொணப்பு பண்டார
   3) கரலியத்த பண்டார 4) ஜயவீர பண்டார

4. போர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து விரட்டுவதற்காக கி.பி 1638 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் மேற்கொண்ட கண்டி மன்னன்
   1) 1ம் விமலதர்மசூரியன் 2) செனரத்
   3) 2ம் இராஜசிங்கன் 4) ஸ்ரீ விஜய இராஜசிங்கன்

5. கண்டி இராச்சியத்தில் இரும்பு உற்பத்திக்குப் பிரசித்தி பெற்ற இடம்
   1) கொத்மலை 2) பலன 3) கிரிவவுல 4) தும்பறை

6. சீதாவாக்கை இராச்சியத்தின் முதல் ஆட்சியாளர்
   1) 1ஆம் இராஜசிங்கன் 2) 2ஆம் இராஜசிங்கன்
   3) 1ஆம் மாயாதுன்னன் 4) 6ஆம் விஜயபாகு

7. அதிக அழுத்தத்துடன் குளத்தில் இருக்கும் நீரை அணைக்கட்டின் ஊடாக கால்வாய்க்கு விடுவிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட குளத்தின் உறுப்பு
   1) மதகு 2) அலைதாங்கி
   3) வான்கதவு 4) கலிங்கல்தொட்டி

8. ஐரோப்பாவில் மத்தியகால இறுதியில் பொலஞ்ஞோ, பாதுவா போன்ற பல்கலைக் கழகங்கள் தோற்றம் பெற்ற நாடு
   1) ஜேர்மனி 2) பிரான்ஸ் 3) ஒல்லாந்து 4) இத்தாலி

9. உரோமில் சிஸ்டைன் ஆலயப் பாவுகையில் சிறந்த ஓவியங்களை வரைந்தவர்
   1) மைக்கல் ஆஞ்சலோ 2) ரபாயர்
   3) லியனாடோ டாவின்சி 4) டொனடேலா

10. "வானியல் விஞ்ஞானத்தின் தந்தை" என அழைக்கப்படுபவர்
   1) ஜோஹென்னர் கெப்லர்   2) நிக்கலஸ் கொப்பனிக்கல்
   3) கலிலியோ கலிலி   4) மைக்கல் சர்டேவர்

11. போர்த்துக்கேய இனத்தவரான வாஸ்கொடகாமா உள்ளிட்ட குழுவினர் இந்தியாவில் வந்திறங்கிய இடம்
   1) பாண்டிச்சேரி   2) கல்கத்தா   3) கள்ளிக்கோட்டை   4) மும்பாய்

12. ஒல்லாந்தரின் கீழைத்தேச மத்திய நிலையம் அமைந்திருந்த இடம்
   1) மன்னார்   2) சந்திரநாகூர்   3) மதுரை   4) பத்தேவியா

13. முல்லேரியாப் போர் பற்றி அறியவுதவும் இலக்கியம்
   1) பூஜாவலிய   2) ராஜாவலிய   3) சூளவம்சம்   4) மகாவம்சம்

14. போர்த்துக்கேயருக்கு உரித்தான ஆசியாவின் பிரதேசங்களை நிர்வகிக்கும் மத்திய நிலையம் அமைந்திருந்த இடம்
   1) கோவா   2) பாண்டிச்சேரி   3) சென்னை   4) கள்ளிக்கோட்டை

15. 1638 இல் கன்னொருவவில் இரண்டாம் இராஜசிங்கனுக்கு எதிராகப் போர்த்துக்கேயப் படையை நடாத்திச் சென்றவர்
   1) பேரோ லோபேஸ் த சூசா   2) தொன் ஜெரோனி மோத அசவேது
   3) கொன்ஸ்தாந்தினூத சூசா   4) தி யோகோரு மெனோ

16. சப்பிரகமுவ பிரதேசத்தில் கத்தோலிக்க சமயத்தினை பரப்புவதற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட சபை
   1) பிரான்சிஸ்கன் சபை   2) டொமினிக்கன் சபை
   3) அகஸ்தீன் சபை   4) இயேசு சபை

17. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சியாளன்
   1) விஜயகூழங்கை   2) பரராஜ சேகரன்   3) குலசேகரன்   4) சங்கிலி மன்னன்

18. 15ஆம் நூற்றாண்டில் கப்பல் பயிற்சி பாடசாலைகளை நிறுவிய கடலோடி ஹென்றியின் நாடு
   1) இத்தாலி   2) ஸ்பெயின்   3) போர்த்துக்கல்   4) ஒல்லாந்து

19. அபயகிரி விகாரையினை அமைத்த மன்னன்
   1) தேவநம்பியதீஸ்ஸன்   2) துட்டகைமுனு
   3) மகாசேனன்   4) வலகம்பா

20. கண்டி இராச்சியத்திற்கு பாதுகாப்பாகக் காணப்பட்ட மலைகள்
   1) ஹடவத்த, ஹரந்தான   2) சிவனொலிபாதமலை, ஹடவத்த
   3) ஹந்தான, நமுனகுல   4) நமுனகுல, நக்கிள்ஸ்

(20×2=40 புள்ளி)


kalvi.lk

பகுதி - II

❖ முதலாம் வினாவில் அ, ஆ பகுதிகள் கட்டாயமானது.

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) அ. 1. மூன்றாம் தவணை வரலாறு பாடத்தில் நீர் செய்த கணிப்பீட்டு வகையைக் குறிப்பிடுக. (02 புள்ளகிள்)

2. கணிப்பீட்டிற்காக நீர் தகவல் திரட்டிய வழிகள் இரண்டு தருக. (02 புள்ளகிள்)

3. கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்ததன் மூலம் நீர் பெற்றுக்கொண்ட பயன்கள் இரண்டு தருக. (02 புள்ளகிள்)

ஆ. பின்வரும் இடங்களைத் தரப்பட்ட இலங்கைப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

1. அநுராதபுரம்
2. திருகோணமலை
3. யாழ்ப்பாணம்
4. கண்டி
5. கொழும்பு
6. மகாவலி கங்கை (6×1=6 புள்ளிகள்)

02) 1. பின்வரும் தேவைகளுக்காக அமைக்கப்பட்ட பொய்கைகளைக் குறிப்பிடுக.

i) நீர்ப் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட பொய்கை

ii) மழைநீரை முறையாகச் சேமிப்பதற்காக அமைக்கப்பட்ட பொய்கை

iii) அழகுக்காக அமைக்கப்பட்ட பொய்கை (03 புள்ளிகள்)

2. i) புராதன இலங்கையில் அமைக்கப்பட்ட கால்வாய்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளகிள்)

ii) கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி புராதன உலோகக் கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் இருவரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

3. i) அநுராதபுரத்தில் கட்டப்பட்ட பிரமாண்டமான தாதுகோபுரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii) நீர்ப்பூங்காவின் சிறப்பான அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

03) 1. கண்டி இராச்சியத்திற்குப் பாதுகாப்பு வழங்கிய ஆறு, இரு மலைகள் என்பவற்றைத் தருக. (03 புள்ளிகள்)

2. கண்டி இராச்சியத்தினை ஆட்சி புரிந்த நாயக்க அரச வம்ச ஆட்சியாளர்கள் நால்வரையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3. i) கண்டிய சமூகத்தின் திருமண முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii) இரண்டாம் இராஜசிங்க மன்னன் கால ஆட்சியின் முக்கியத்துவம் மூன்று தருக. (03 புள்ளிகள்)

04) 1. மத்தியகால இறுதியில் பின்வரும் நாடுகளில் தோற்றம் பெற்ற பல்கலைக் கழகங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

இத்தாலி -
பிரான்ஸ் -
இங்கிலாந்து -

2. i) லியனாடோ டாவின்சியின் இரு கலைப்படைப்புக்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii) பின்வருவோர் வைத்தியத்துறைக்கு ஆற்றிய சேவைகளைக் குறிப்பிடுக.

1. வில்லியம் ஹார்வி
2. பெரசல்ஸ் (02 புள்ளிகள்)

3. i) திருச்சபைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த இயக்க தலைவர்கள் இருவரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii) புவிதொடர்பாக பின்வருவோர் முன்வைத்த கொள்கைகளைக் குறிப்பிடுக.

1. நிக்லஸ் கொப்னிகஸ்
2. ஹொஹென்னஸ்
3. ஹொஹென்னஸ் கெப்லா
4. கலிலியோ கலிலி (03 புள்ளிகள்)

05) 1. மத்திய தரைக்கடலை அண்மித்து அமைந்திருந்த வர்த்தக நகரங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

2. i) பின்வரும் நாடுகளில் நாடுகாண் பயணத்திற்கு ஆதரவாக இருந்தவர்களின் பெயர்களைத் தருக.

1. போர்த்துக்கல்
2. ஸ்பானியா (02 புள்ளிகள்)

ii) நாடுகாண் பயணங்கள் மேற்கொள்ளப்படக் காரணமாக இருந்த விடயங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

3. i) பின்வரும் நாடுகளில் இருந்து ஐரோப்பாவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக.

1. சீனா 2. இலங்கை 3. இந்தியா (03 புள்ளிகள்)

ii) ஐரோப்பியர் ஆசியாவுக்கு வந்ததன் நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

06) 1. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது பின்வரும் இராச்சியங்களை ஆட்சி புரிந்த மன்னர்களின் பெயர்களைத் தருக.


1. கோட்டை
2. கண்டி
3. யாழ்ப்பாணம் (03 புள்ளிகள்)

2. இலங்கைக்கு வருகை தந்த (மறைபரப்பு) மிசனரிகள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3. i) போர்த்துக்கேயர் வருகையால் இலங்கையின் பண்பாட்டில் இணைந்த பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.

1. உடை
2. இசை
3. பெயர்கள் (03 புள்ளிகள்)

ii) போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தினைக் கைப்பற்ற முடியாமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page